## முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலும்

# சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள்தான் தமிழ்நாட்டுக்கே எடுத்துக்காட்டு!

## 6,718 பேருக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கி – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 13–

**சென்னை, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டைகளை வழங்கும் நிகழ்ச்சி, நேற்று முன்தினம் மாலை தொகுதியில் இருவேறு இடங்களில் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, தொகுதியைச் சேர்ந்த 6 ஆயிரத்து 718 பேருக்கு மருத்துவ காப்பீட்டு அட்டைகளை வழங்கினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், "முதல்வரின் காப்பீட்டு அட்டைகள் திட்டத்தைச் செயல்படுத்துவதிலும், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள்தான் தமிழ்நாட்டுக்கே ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில் அவர் பேசியதாவது:-

"இங்கு மாவட்டக் கழகச் செயலாளர் சொன்னதைப் போல ஒவ்வொரு வீடாகச் சென்று கணக்கெடுத்து கிட்டத்தட்ட 6 ஆயிரத்து 718 பேருக்கு நம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் மட்டும் இன்று இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துக்கான அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதில் சேப்பாக்கம் பகுதியில் மட்டும் 3 ஆயிரத்து 853 பேர்களுக்கும் திருவல்லிக்கேணி பகுதியில் 2 ஆயிரத்து 865 பேர்களுக்கும் இன்றைக்கு அட்டைகள் வழங்கப்படுகின்றன.

**காப்பீட்டு அட்டைகள்!**

இந்த நிகழ்வின் அடையாளமாக சேப்பாக்கம், திருவல்லிக்கேணியில் தலா 500 பேரை வரவழைத்து இந்த நிகழ்வை இங்கே தொடங்கி இருக்கிறோம். விரைவில், ஒவ்வொரு வீடாகச் சென்று அந்த அந்தப் பயனாளிகளிடம் காப்பீட்டு அட்டைகள் ஒப்படைக்கப்படும். இந்த மருத்துவக் காப்பீடுத் திட்ட அட்டை உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய் வரை, உங்களின் மருத்துவச் செலவிற்கு எந்த மருத்துவமனையாக இருந்தாலும், இதைவைத்து நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இங்கு அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப் போல் கோவிட் பெருந்தொற்று காலத்தில் தடுப்பூசி போடுவதற்கு, அனைவரும் பயந்து கொண்டிருந்தார்கள். யாருமே தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு முன்வரவில்லை.

நம் முதலமைச்சர் அவர்களே மற்றவர்களுக்கெல்லாம் முன் மாதிரியாக கோவிட் தடுப்பூசியை போட்டுக்கொண்டார். அத்துடன் கோவிட் வார்டுக்கே அதற்கான உடையை அணிந்துகொண்டு சென்று நோயாளிகளைப் பார்த்து, சிகிச்சை அளிப்பது பற்றி விசாரித்து அவர்களுக்கு ஆறுதலும் கூறி விட்டு வந்தார். அதனைத் தொடர்ந்து கோவிட் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள பலரும் முன்வந்தனர்.

**பெருமை, உங்களுக்குத்தான்!**

நம் சேப்பாக்கம் திருவல்லிக் கேணி தொகுதிதான் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக தெருத்தெருவாக முகாம்கள் அமைத்து இன்னும் சொல்லப்போனால், வீடு, வீடாகச் சென்று தடுப்பூசி போட்டு, கோவிட் தடுப்பூசி பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்தப் பெருமை நம் தொகுதி மக்களான உங்களுக்குத் தான். அதன் பிறகுத்தான் தமிழ்நாடு முழுக்க தடுப்பூசி போட ஆரம்பித்தார்கள்.

இன்னும் சொல்லப் போனால், எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்தார்கள். `மற்ற எந்தத் தொகுதியிலும் தடுப்பூசி போட யாரும் வருவதில்லை. ஆனால்சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு மட்டும் எப்படி தடுப்பூசி கிடைக்கிறது?' என்று கேட்டார்கள். அப்போது, `என் தொகுதி மக்கள் தைரியமாக தடுப்பூசி போட வந்திருக்கிறார்கள். கொரோனாவை தடுக்க இந்தத் தடுப்பூசியைத் தவிர வேறு வழி கிடையாது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி ருக்கிறோம்' என்று பெருமையாகச் சொன்னேன்.

**'சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை'**

உங்களைப் பார்ப்பது இது முதல்முறையோ, இரண்டாவது முறையோ கிடையாது. சென்னையில் நான் இருக்கும்போது பல நிகழ்ச்சிகளில் உங்கள் அத்தனை பேரையும் நான் நேரில் சந்தித்திருக்கிறேன். தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் செய்தாலும், அங்கு அத்தனை பேரும் என்னை அழைப்பது என்னவென்றால் 'சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை' என்றுதான். அதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய நம் பகுதி மக்களாகிய நீங்கள்தான். இந்தத் திட்டத்தின் பயன்கள் பற்றி மற்ற தொகுதி மக்களுக்கும் எடுத்துக்கூறுங்கள்.

உங்கள் அத்தனை பேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர். அது மட்டுமல்ல. இப்போது அவர் கேட்பாளர்.வேட்பாளரா என்பதை தலைவர் முடிவு செய்வார். அவர், 'எல்லோரும் ஜாக்கிரதையாக இருங்கள், தேர்தல் வருகிறது' என்று சொன்னார். அதற்கு என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியும்.

**அவர்கள் தேர்தலுக்காக மட்டும் சந்திப்பவர்கள்!**

நமக்குச் சம்பந்தமே இல்லாதவர்கள், நம் உரிமையைப் பறிக்கக் கூடியவர்கள் நம்மிடம் இப்போது ஓட்டு கேட்பார்கள். வெறும் தேர்தலுக்குத் தேர்தல் மட்டும்தான் அவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். ஆனால், வருடம் முழுவதும் என்ன பிரச்சினை என்றாலும் உங்கள்கூட நிற்பது யார் என்பது நான் சொல்லி உங்களுக்குத் தெரியத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும். எனவே, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் அத்தனை பேரும் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இருந்தாலும் இந்தளவுக்கு முகாம் அமைத்து அனைத்து வீடுகளுக்கும் காப்பீட்டு வாங்கித் தரும் அளவுக்கு முன்னெடுத்தது தமிழ்நாட்டிலேயே நாம்தான் என நினைக்கிறேன். பயனாளிகள் அனைவரும் இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிந்துகொண்டு, இதைப் பொது மக்களிடம் கொண்டு சேர்த்து இந்தத் திட்டத்திலும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் தான் தமிழ்நாட்டுக்கே ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த, இந்த முகாம்களையெல்லாம் தொடர்ந்து ஒவ்வொரு வட்டமாக ஏற்பாடு செய்த மாவட்டக் கழக செயலாளர், பகுதிக் கழக செயலாளர்கள், அனைத்து வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அஸ்வின், பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய அலுவலர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிக் கழக செயலாளர்கள் மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், தொகுதி பார்வையாளர் சி.ஹெச்.சேகர், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகதீசன், கமலா செழியன், மங்கை ராஜ்குமார், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






எதிர்பாராத மருத்துவ தேவைகளுக்காக அனுமதிக்கப்படுபவர்கள், அந்த அவசரச் சூழலில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டைக்காக விண்ணப்பிக்கும் சூழலோ அல்லது காப்பீடு வசதி கிடைக்காமல் கடன் வாங்கி மருத்துவம் பார்க்கும் நெருக்கடியோ ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் விதமாக சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 7 வார்டுகளிலும் சிறப்பு முகாம் நடத்தி தொகுதி மக்களை முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தில் சேர்க்க சட்டமன்ற உறுப்பினரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அதனடிப்படையில் நடைபெற்ற இந்த முகாம்களில் பங்கேற்று, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தில் விண்ணப்பம் அளித்திருந்தனர். அவர்களில் 6 ஆயிரத்து 718 பேருக்கு காப்பீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டன. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தனித்தனி நிகழ்ச்சிகளில் பங்கேற்று பயனாளிகள் அனைவருக்கும் அந்த காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகதீசன், கமலா செழியன், மங்கை ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.ஹெச்.சேகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மாரச் 13 –

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சின்ன ஆனந்தவாடி கிராமத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஜெயங்கொண்டம் சின்ன ஆனந்தவாடி மற்றும் சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி ஜெயங்கொண்டம் கிளை நகரப்பேருந்து, நகரப்பேருந்து வழித்தடம் எண் 010A, காலை 8.15 மணிக்கு ஜெயங்கொண்டம் ஆனந்தவாடி (வழி) உடையார்பாளையம், பரணம், இரும்புலிகுறிச்சி, சோழன் குறிச்சி வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும். இதேபோன்று காலை 9.15 மணிக்கு சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் (வழி) சோழன்குறிச்சி, இரும்புலிக்குறிச்சி, பரணம், உடையார்பாளையம் வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும். இப்புதியபேருந்து வழித்தடம் நீட்டிப்பால் சின்ன ஆனந்தவாடி, சோழன்குறிச்சி பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்கள் பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல், கோட்ட மேலாளர் (பெரம்பலூர்) ஆர்.ராமநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஒன்றியச் செயலாளர்கள் பூ. செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொ.மு.ச. நிர்வாகிகள் பி.வி.அன்பழகன், சேகர், கொளஞ்சி, குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர்பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சமூக வலைத்தளங்களில் வலம் வருவது!




